# சிறுவர் அமுதம்

19.06.95

கிண்ணம் 6 எண்ணம் 2



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

*Kinder freundliches Magazin*

அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தை பின்சொல்வேன் சினத்தை முன்னே
வென்றிடுவீர் மேதினியில்

-பாரதியார்-



அன்புச் சிறுவர் சிறுமியரே!!

"வாழ்க்கை வாழ்வதற்கே" என்று ஒரு வாக்கியம் உண்டு. வாழ்க்கை என்பது இப்பொழுது உங்களுக்குப் புரியாது. வாழ்க்கை இப்பொழுது உங்களுக்கு விளையாட்டுத்தான். அம்மா, அப்பா, உறவினர், தோழர்கள் இவர்களுக்குள்ளேயே உங்கள் உலகம் இருக்கிறது. ஆனால் உலகம் பெரியது. அது போலவே, வாழ்க்கையும் பெரியது தான். இன்றைய உல்லாச வாழ்க்கையே நாளைய வாழ்க்கையாகவும் இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

வாழ்க்கை என்பது வெறும் கேளிக்கை விளையாட்டல்ல! எத்தனையோ இடர்ப்பாடுகளும் இன்னல்களும், இன்பங்களும் மாறிமாறி வாழ்க்கை எப்படிப் பட்டது என்பதை உங்களுக்கு உணர்த்தும். நீங்கள் பெரியவர்களாகும்போது உணர்ந்து கொள்வீர்கள். அன்பு, அடக்கம், பணிவு போன்ற நல்ல குணங்களை உடையவர்களாக

நீங்கள் வாழவேண்டும். அவை உங்களை மேன்மையுடையவர்களாக்கும். ஆகவே, அவற்றை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். நல்லவர்கள் என்று பெயரெடுங்கள்.

உங்களை மற்றவர்கள் அன்புடன் நேசிக்க வேண்டுமானால் நீங்களும் மற்றவர்களை அன்புடன் நேசிக்க வேண்டும். மற்றவர்களை இழிவுபடுத்தி, மற்றவர்களோடு சண்டையிட்டு, கெட்டவர்கள் என்று பெயரெடுக்கக் கூடாது. அதற்காக அடங்கிப் போய் விட வேண்டும் என்பதில்லை. நீங்கள் நினைப்பது சரி என்று தெரிந்தால், அதற்காக வாதிட்டுச் சண்டையிட்டுப் பெரியவர்களிடம் கூடாத பெயரெடுக்க வேண்டாம். பணிவுடன் உங்கள் நியாயங்களை எடுத்துரைத்து வெற்றி காணுங்கள். நியாயங்கள் சரியானதானால் வெற்றி நிச்சியம்.

நல்ல பிள்ளையென்று பெயரெடுங்கள். அது உங்களுக்கும், உங்கள் பெற்றோருக்கும் நன்மையைத் தரும். இந்த உலகமும் உங்களை மகிழ்வுடன் வரவேற்கும். ஒழுக்கம் அதாவது நல்ல பண்பானது உயிரை விடவும் மேலானது என்பது வள்ளுவர் வாக்கு. இறந்த பின்பும் பெருமை தரக் கூடியது.

-ஆசிரியை-

## சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | க் | தி | ர | வி | ய | ம் | த | மா | து |
| த | ம் | தி | கு | ந் | சா | தி | ரா | டி | செ |
| க் | ர | வி | ந் | தை | ய | ல் | டு | ட் | பா |
| க | க | ப | தி | தா | த் | ஆ | மை | வெ | றி |
| ம் | த | ந் | ச | வ | த | ணை | அ | கு | வ |
| ர | ம | த | ங் | க | ம் | த | ம | க் | ர |
| கா | ய | ம் | கு | பா | மு | ம் | ல் | பா | த |
| வ | ன் | னி | ழ | வா | டை | ய | க | ா | ட் |
| ல | க | வ | ந் | ந் | ய | தி | ப | ர | ஷ |
| ன் | ம | பு | தை | தி | த் | ம | சி | பா | ணை |

முடிவு திகதி. 20.7.95

முதலைக் கண்ணீர் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். முதலைகள் கண்ணீர் விடும் தன்மை கொண்டவை தான். உணவுண்ணும் வேளையில் மட்டும் இவற்றின் கண்களிலிருந்து நீர் வடியும்.

# கங்கையில் கரைக்காத பாவம்

முன்னொரு காலத்தில் முரடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பல கொலைகளைச் செய்த அவன் தான் பாவங்கள் பல செய்ததை உணர்ந்தான். ஒருமுறை அவனது ஊருக்கு ஒரு ஞானி ஒருவர் வந்திருந்ததால் அவன் ஞானியைப் பார்க்கச் சென்றிருந்தான். அங்கு அந்த ஞானி முரடனிடம் "மகனே! நீ இப்பிறவியில் பல பாவங்களைச் செய்திருக்கிறாய். உன் பாவம் தீர, நீ புனித கங்கையில் குளிக்க வேண்டும் இல்லையேல் நீ நரகத்திற்குப் போவாய்" என்றார்.



முரடனும் தன்னிடம் இருந்த பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்து விட்டு கங்கையில் தனது இறுதி நாட்களைக் கழிக்கக் கங்கை நதியை நோக்கிப் புறப்பட்டான். பலநாள் பயணத்திற்குப் பின் அவன் ஒரு நதியைக் கண்டான். அந்த நதிதான் கங்கைநதி என்று அவன் நினைத்தான். ஆகவே அந்தநதிக் கரையில் பத்து வருடங்கள் தங்கினான்.

அவ் வழியாக வந்த ஒரு முனிவர் முரடனைக் கண்டார். அவனிடம் "ஏனப்பா இந்தச் சிறு நதிக்கரையில் வாழ்கின்றாய்?" என வினவினார்.


அதற்கு முரடன் "சிறு நதிக்கரையா? கங்கை நதியல்லவா இது" என்றான். முனிவர் சிரித்துக் கொண்டே "இல்லையப்பா இல்லை, இது கங்கையே இல்லை, இமயமலையும் சிறுகுன்றும் ஒன்றாகுமா? நீ கங்கைக்குச் செல்ல வேண்டுமென்றால் இன்னும் பல தூரம் நடக்க வேண்டும்" என்றார்.

முரடனும் ஏமாற்றத்தோடு பயணத்தை மீண்டும் தொடர்ந்தான். பல ஆண்டுகளாக நடந்தான். தூரத்தில் ஒரு நதியைக் கண்டான், அதைச் சுற்றிச் சிலரையும் கண்டான். அது கங்கை என்று நினைத்தான். அந்த

நதிக்கரையில் இருபதுவருடங்கள் வாழலானான். முரடனோ வயோதிகனாக மாறிவிட்ட நேரத்தில் மீண்டும் முன்பு கண்ட முனிவரைக் கண்டான். முனிவர் அவனைக் கண்டதும் "இதுவும் புனித கங்கையல்ல, இது புனித நர்மதை" என்றார். முனிவரின் பேச்சு முரடனுக்கு மீண்டும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஆனால் முரடன் பயணத்தை மீண்டும் தொடர்ந்தான். ஆனால் அவன் கங்கையை இடையும் முன்பே இறந்து விட்டான். ஆனால் சொர்க்கத்திற்கே சென்றான். ஒன்றும் புரியாத அவன் இறைவனிடம் சென்று இறைவா "நான் பல பாவங்களைச் செய்தவன், பாவங்கள் தீர நான் புனித கங்கையையும் அடையவில்லை. ஏன் நான் சொர்க்கத்திற்கு வந்தேன்? நரகத்திற்கு அல்லவா செல்ல வேண்டும்?" எனக் கேட்டான்.

அதற்குக் கடவுள் "மானிடா, நீ மனத்தாலே நீ செய்த பாவங்களை உணர்ந்தாய், உன்னிடமிருந்த பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்தாய், வயோதிகனான போதும் விடாமுயற்சியுடன் கங்கையில் உனது பாவங்களைக் கழிக்க நோக்கி நடந்தாய். இவ்வளவும் போதாதா நீ சொர்க்கத்திற்கு வருவதற்கு?" என்றார்.



சிட்னி சார்லிக்காக, சார்லி தங்குவதற்கு ஆடம்பர ஓட்டல் ஒன்றில் அறை ஏற்பாடு செய்திருந்தார். அங்கு சார்லியை இறக்கி விட்டு தம்பி சார்லிக்காக மியூச்சுவல் பிலிம் காப்பிரேசன் என்ற படநிறுவனத்தாரைச் சந்திக்கச் சென்றுவிட்டார். சார்லி வருவதற்கு முன்பாகவே இந்நிறுவனத்துடன் சிட்னி தொடர்பு கொண்டிருந்தார்.

வாரத்தில் 10,000 டொலர் சம்பளம் என்றும், ஒரு வருடத்துக்கு 5,20,000 டொலர் என்று ஒப்பந்தம் பேசி முடித்திருந்தார் சிட்னி. அது மட்டுமல்லாமல் சார்லிக்கு மருத்துவ பரிசோதனை முடிந்ததும், 150,000 டொலர் முன்பணமாகக் காப்புறுதி செய்யப்படும் என்ற சந்தோஷச் செய்தியையும் தன் தம்பியிடம் தெரிவித்திருந்தார். சார்லியோ நம்பவும் முடியாமல் திணறினார். வறுமையின் கோரப்பிடியில் சிக்கி,

ஒருவேளை உணவுக்காகக் கஷ்டப்பட்ட தம் வாழ்க்கையில், அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கும் முன்னேற்றங்களை எண்ணி ஆனந்தப் பெருமூச்சு விட்டார். எதையுமே நினைக்காமல் கண்களை இறுக மூடிக் கொள்ள வேண்டும் போல இருந்தது. அது முடியவில்லை. எங்கோ அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அறைக்குள் முடங்கிக் கிடக்கப் பிடிக்கவில்லை.

அறையைப் பூட்டிக் கொண்டு வெளியேறினார். புதிதான ஒன்றைப் பார்ப்பது போல நியூயோர்க் கடை வீதியில், அங்கும் இங்கும் பார்த்தவாறே நடந்தார் சார்லி. அவரை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இடுப்பிலிருந்து விழுந்து விடக் கூடிய "தொளதொள" நீண்ட காற்சட்டை, பொருத்தமில்லாத இறுக்கிய சட்டை, சிறிய மீசை, அளவில்லாத தொப்பி, பெரிய சப்பாத்து, ஆகியவற்றுடன் திரையிலே இரசித்த நியூயோர்க் இரசிகர்களுக்கு, ஒப்பனையில்லாத, கம்பீரமான ஆணழகனை எப்படிச் சார்லி என்று கண்டு கொள்ள முடியும்?

(தொடரும்)

# ஔவையார்



பூதன் வீட்டிலிருந்து புறப்பட்ட ஔவையார் வழியிலே, ஒருவன் தன் மனைவியை அடித்துத் துன்புறுத்துவதைப் பார்த்தார். ஓடிவந்து அவனைத் தடுத்து அடிக்கும் காரணத்தைக் கேட்டார். அவன் ஔவையைப் பார்த்து "பாட்டி, உணவு கேட்டு வந்த ஒருவனுக்கு சோறு இல்லையென்று நான் அனுப்பிவிட, அவனை அழைத்து வந்து சோறு கொடுத்தாள். அதனால் தான் அடிக்கிறேன்" என்றான்.

ஔவைக்கு அவன் மேல் கோபம் வந்தது. அவனைப் பார்த்து 'மான் போல மென்மையான இந்தப் பெண்ணுக்கு மரத்தைப்போல இறுகிய மனம் கொண்ட உன்னைக் கணவனாக்கிய கடவுளிடம் எனக்குக் கோபமாக இருக்கிறது' என்று வெறுப்போடு கூறினார்.

ஒருநாள் பசியோடு ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தார். வெளியிலிருந்து வந்த வீட்டுக்காரன் அவரை ஓடோடி வந்து வரவேற்றான். உள்ளே தன் மனைவியிடம் சென்று எப்படிச் விஷயத்தைச் சொல்லுவது என்று யோசித்தான். அவன் மனைவியோ பொல்லாதவள். எனவே அவன், மனைவிக்குத் தலைவாரி அழகாகப் பின்னி விட்டான். அவளுடைய தலையில் பேன் பார்த்தான். அவளை விட அழகியில்லை என்று புகழ்ந்தான்.

பின் மெதுவாக ஔவையார் வந்திருப்பதையும், அவர் பசியோடிருப்பதால் அவருக்கு உணவு பரிமாற வேண்டுமென்றும் மெதுவாகக் கூறினான். அவளோ கோபத்தோடு, அருகிலிருந்த சுளகைக் எடுத்துக் கணவனை அடித்துக் கொண்டே, விருந்து கொடுக்க

முடியாதென்று மறுத்து விட்டாள். வீட்டுக்காரன் வெளியே வந்தான். அவனைப் பார்க்க ஔவைக்குப் பாவமாக இருந்தது. 'நீ, இப்படிப்பட்ட பெண்ணுடன் வாழ்வதைவிடச் சன்னியாசியாவது நல்லது' என்று கூறினார்.

ஔவையார் இந்தச் சம்பவத்தை எப்படிச் சொல்கிறார் பாருங்கள்:

இருந்து முகம்திருத்தி ஈரோடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப- வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத்தான

-தொடரும்-

உனது கடைசிக் கேள்விக்கு விஞ்ஞானத்தால் பதில் அளிக்க முடியாது.

-ஐன்ஸ்டைன்-

நகரம் என்பது லட்சக்கணக்காண மக்கள் கூடித் தனிமையிலே வாழ்வது.

-தாகோ

# ஓட்டப் பந்தயம்

ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஓரே ஒரு மகள்தான், பெயர் மஞ்சுளா, அழகிலும் பண்பிலும் மட்டும் அவள் சிறந்தவளல்ல ஓட்டத்திலும்தான். தன்னை ஓட்டப்போட்டியில் யார் வெல்லகிளார்களோ, அவரைத்தான் தான் திருமணம் முடிக்க விரும்பினாள். பலர் வந்து போட்டியிட்டனர், ஆனால் ஒருவராலும் அவளை வெல்ல முடியவில்லை.

விஜயன் என்றொரு வியாபாரி வந்திருந்தான். மஞ்சுளாவை அவன் ஒருமுறை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவளைக் கண்டதும் அவள் மீது காதல் கொண்ட அவன், அவளையே எப்படியாவது மணம் புரிய எண்ணினான். ஆனால் அவளுடன் போட்டியிட்டு வெல்வது சுலபமானது அல்ல. விஜயனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஒரு முறை செல்வந்தரிடம் சென்று, தான் மஞ்சுளாவுடன் போட்டியிட விரும்புவதைச் சொன்னான். செல்வந்தரும் சம்மதித்தார்.

போட்டி நடக்கச் சற்று நேரத்திற்கு முன்பே போட்டி நடக்கும் இடத்திற்குச் சென்று, சில

தங்கக்கட்டிகளை ஓடும் இடத்தில் வைத்தான் விஜயன். போட்டி துடங்கியது. மிக விரைவாக ஓடத்துடங்கிய மஞ்சுளா அங்காங்கே தங்கக் கட்டிகளைக் கண்டதும், இவைகளைப் பொறுக்கத் துடங்கினாள். பாரம் ஏறியது. விரைவாக அவளால் ஓட முடியவில்லை.



அந்த நேரத்தில் விஜயன் விரைவாக ஓடி வெற்றி பெற்றான். பின்பு மஞ்சுளாவைத் திருமணம் செய்து கொண்டு இன்பமாக அவளுடன் வாழ்ந்தான்.

# பூனைக் குட்டிகள்

கோடை விடுமுறை வந்து விட்டது. காமினிக்கு எங்கேயாவது போகவேண்டும் போல இருந்தது. கிராமத்துக்குத் தாத்தாவிடம் போனால் நல்லது. தூரத்துக்குப் போக வேண்டும். அப்பா சம்மதித்தாலும் அம்மா சம்மதிக்க மாட்டாளே! காமினிக்கு யோசனையாக இருந்தது. முதலாம் வகுப்பில் படிக்கும் காமினிக்கு ஒரு குட்டித்தம்பி இருக்கிறான். அவனால் அவளோடு சேர்ந்து விளையாட முடியாது. அடிக்கடி அழும் அவனை அம்மாவும் அப்பாவும் தூக்கி வைத்திருப்பார்கள். குட்டித்தம்பியை ஏனோ காமினிக்குப் பிடிப்பதில்லை.

மாலை நேரம் வந்தது. வேலைக்குச் சென்றிருந்த அப்பாவும் வந்து விட்டார். காமினி அப்பாவிடம் விடுமுறைக்கு எங்கேயாவது செல்ல வேண்டும் என்று கேட்டாள். குட்டித்தம்பியைக் கொண்டு போக முடியுமா?. அப்பாவுக்கு லீவு கிடைக்குமா? அடுத்த விடுமுறைக்குப் போகலாம் அப்பா சொன்னார். காமினியோ பிடிவாதம் செய்தாள். அம்மா மிகவும் கோபித்துக்

கொண்டாள். அன்று அழுது கொண்டே காமினி தூங்கி விட்டாள்.



அடுத்தநாள் அம்மா காமினியிடம் சொன்னாள் காமினி, தம்பியைக் கொண்டு தூர இடத்திற்குப் போக முடியாது. தாத்தா இன்றைக்கு வருவார். தாத்தாவோடு சென்று உன் விடுமுறையைக் கொண்டாடு என்றாள். காமினி சந்தோஷத்தோடு தலையாட்டினாள். தாத்தாவும் வந்தார். திரும்பிச் செல்லும்போது தாத்தாவுடன் காமினியும் கூடவே கிராமத்துக்குச் சென்றாள். தோட்டக்காரரான தாத்தாவிடம் கோழி, வாத்து, ஆடு, மாடு, எல்லாமே நிறைய இருக்கும். பாட்டி அவளுக்கு விருப்பமான

பலகாரங்கள் எல்லாம் செய்து கொடுப்பாள். அவள் சொன்னதைச் செய்ய நிறைய வேலையாட்கள். கற்பனை செய்து கொண்டே கிராமத்துக்கு வந்தாள்.

கிராமத்தில் அவள் பாடு கொண்டாட்டம்தான். அரசியைப் போல அவள் கட்டளையிட்டாள். எல்லாமே அவள் எண்ணப்படிதான் நடந்தது. சின்னக் குட்டியாக இருந்த வீரன் நாய் பெரிதாக வளர்ந்திருந்தது. அவளைக் கண்டதும் அடையாளம் கண்டு கொண்டு வாலையாட்டியது. காமினி வீரனை அன்புடன் தட்டிக் கொடுத்தாள். அவள் பின்னாலேயே எந்நேரமும் சுற்றிச் சுற்றி வரும். வயலும், தோட்டமும் அவளுக்கு இன்பத்தைக் கொடுத்தது.

ஒருநாட் காலையிலிருந்தே வீரனைக் காணவில்லை. வீடு முழுவதும் தேடியும் எதுவும் கிடைக்கவில்லை. தோட்டத்திலும் காணவில்லை. வயலுக்குச் சென்று 'வீரா வீரா' என்று பலமாகக் கூப்பிட்டாள். வெகுதூரத்தில் வீரனின் குரைப்புச் சத்தம் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள். அங்கே வீரன்

குவித்துக் கிடந்த வைக்கோற் கட்டுகளைப் பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தது.

காமினி சென்று பார்த்தாள். என்ன ஆச்சரியம்! பூனையொன்று படுத்திருந்தது. கூடவே நான்கு பூனைக்குட்டிகள் இருந்தன. அழகான கண்களால் அவளைப் பார்த்து 'மியாவ் மியாவ்' என்று மெல்லியதாக சத்தம் போட்டன. அவளுக்குப் பார்க்க ஆசையாக இருந்தது. அவளைத் தேடிக் கொண்டு தாத்தாவும் வேலையாட்களும் வந்தனர். பூனையையும் குட்டிகளையும் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தனர். காமினிக்குச் சந்தோஷமாக இருந்தது. அந்த விடுமுறை அவளுக்கு மிகவும் குதூகலமாகக் கழிந்தது.

ஊருக்குப் போகும்போது காமினி தாத்தாவிடம் சொன்னாள். தாத்தா, பூனையையும் குட்டிகளையும் யாருக்கும் கொடுக்கக் கூடாது. அடுத்த விடுமுறைக்கு நான் வரும்போது விளையாட வேண்டும், தாத்தாவும் சம்மதம் கொடுத்தார். காமினி மகிழ்ச்சியோடு ஊருக்குச் சென்றாள்.

## உலக அனுபவம்



மாணிக்கம் மிகவும் நாணயம் உள்ளவர். எல்லோரிடமும் அன்புடன் பழகுவார். அயலிலுள்ளவர்கள் அவரிடம் மிகுந்த விசுவாசத்துடன் பழகி வந்தனர். சேகர் என்று அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் மாணிக்கத்தின் மகன் என்பதைவிட, அவருடைய நல்ல குணங்களைக் கொண்டிருக்கவில்லை. மிகவும் பொல்லாதவனாக இருந்தான். எந்த வயதினராக இருந்தாலும்

எதிர்த்துப் பேசுவான். மற்றவர்கள் நன்மைக்குச் சொன்னாலும் கேட்க மாட்டான்.

இப்படிப் பட்ட குணங்களால், அவனை எல்லோரும் வெறுத்து வந்தனர். நல்லவரான மாணிக்கத்துக்கு இப்படிப் பிள்ளை பிறந்திருக்கின்றானே! என்று சொல்லிக் கவலைப் படுவார்கள். பத்தாம் வகுப்புப் படித்து வந்தான். பொல்லாத பிள்ளையாக இருந்தாலும், வகுப்பில் கெட்டிக்காரனாக இருந்தான். அவன் ஆசிரியர்கள் மட்டும் அவனுக்கு மதித்தனர். மற்றவர்கள் எல்லோரும் சேகரை வெறுத்தனர்.

இதனால் அவன் கவலைப்படவேயில்லை. மாணிக்கமும் அவரது மனைவியும் பெரிதும் கவலைப் பட்டனர். அவர்கள் மகனுக்குப் பலவிதமாகப் புத்தி சொன்னார்கள். சேகர் எதையும் கேட்பதில்லை. அவர்கள் தங்களுக்குள்ளே மனம் நொந்து போனார்கள். யாரிடம் சொல்லி ஆறுவது? தங்களுக்குள்ளேயே வேதனையைச் சொல்லிக் கவலைப் பட்டனர். மகன் நன்றாகப் படித்து வருவது மட்டும் தான் அவர்களுக்கு ஆறுதலைத் தந்தது.

ஒரு முறை அவர்கள் ஊரில் அரசாங்கத்துக்கு எதிராகச் சில குழப்பக்காரர்கள் கடைகளை மூடி

ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்த ஊர்ச் சனங்கள் அதனை விரும்பவில்லை. எதிப்பதையே தனது கொள்கையாகக் கொண்ட சேகர் குழப்பக்காரருக்கு ஆதரவாகப் பேசினான். மரியாதைக்குரியவரான மாணிக்கத்தின் மகனே தங்களுக்கு ஆதரவாக இருப்பது குழப்பக்காரருக்குச் சந்தோஷமாக இருந்தது.

இதை அறிந்ததும் மாணிக்கம் மிகவும் கவலைப்பட்டார். சேகரை அழைத்து அன்புடன், உனக்கு உலக அனுபவம் இல்லை. எதையும் ஆராயாமல் குழப்பம் செய்பவர்களுக்கு ஆதவாகப் பேசாதே. நீ, சிறியவன். படிப்பதில் மட்டும் கவனத்தைச் செலுத்து. உன் நன்மைக்குத் தான் கூறுகிறேன். என்று கூறினார். அவனோ தந்தையை எதிர்த்தான்.

அந்த வேளையில் பத்தாம் வகுப்புப் பரீட்சையும் நெருங்கி வந்தது. குழப்பக்காரர்களை பொலீசார் கைது செய்தனர். அவர்களுக்கு ஆதரவாகப் பேசிய சேகரும் பொலீசாரால் பிடிபட்டான். ஆதரவாகப் பேசிய குற்றத்திற்கு நன்றாக அடியும் உதையும் வாங்கினான். அதன் பின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். உடம்பின் காயங்கள் ஆறவே நீண்ட நாட்கள் சென்றன.


அதற்கிடையில் பரீட்சை வந்து விட்டதால், சேகரால் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை. வைத்தியசாலையில் இருந்து விக்கி விக்கி அழுதான். அவன் பதினொராம் வகுப்புக்குச் செல்ல இன்னும் ஒரு வருடம் பொறுத்திருக்க வேண்டும். தான் தந்தை சொல்லைக் கேட்காமல் இருந்ததால்தானே இப்படிக் கஷ்டப்பட வேண்டி ஏற்பட்டது. இனியாவது தந்தையின் சொல்லைக் கேட்டு நல்லபிள்ளையாக இருக்க வேண்டும் என்று மனதிற்குள் சத்தியம் செய்து கொண்டான்.

மாணிக்கம் வைத்தியசாலைக்கு வந்தபோது தந்தையிடம் மன்னிப்புக் கேட்டான். மாணிக்கமும் மகனை அன்புடன் அணைத்து ஆறுதல் கூறினார். மகன் நல்லவனாகத் திருந்தியது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

தினமும் எந்தெந்த நேரத்தில் எந்தெந்த வேலை பார்ப்பது என்று வாழ ஆரம்பித்த போதுதான் என்னுடைய குணநலங்கள் உயர்ந்தன. நன்றாக வாழமுடியும் என்ற நம்பிக்கையும் பிறந்தது. நீங்களும் திட்டமிடுங்கள்.

நெப்போலியன் ஹில்

<u>கரும்பலகை</u>



கரும்பலகையது வெறும் பலகையல்ல
நம் முன்னோர் காட்டிய அரும் பலகை
அழியாத கல்வி தரும் ஆக்கப் பலகை
குறையாத புகழ் தரும் சங்கப் பலகை

பேரும் புகழும் நல்வாழ்வு வாழ்ந்திட
ஆயிரம் ஆயிரம் போதிக்குமே
எண்ணும் எழுத்தும் கண்ணெனச் சொல்லும்
அறிவுக் கண்ணான ஆக்கப் பலகை


எந்நாட்டவர்க்கும் பேதமில்லாமல்
எத்தனை பேர் வந்தாலும், எத்தனை பேர் இருந்தாலும்
அத்தனை பேருக்கும் சம கல்வி தந்து
ஆறறிவு தந்திடும் உயர் பலகை



உயிர் மெய் எழுத்து உயிர் பெற்றிட
பல கைகள் சேர்ந்து கரும்பலகை தன்னில்
அள்ள அள்ளக் குறையா அரு மணிகளாக
பூத்துக் குலுங்கும் அரும்பலகை

பாட்டன் பாட்டி அப்பா அம்மா
அண்ணா அக்கா தம்பி தங்கை
யாவரும் அழகாய் பள்ளிக்கூடம் சென்று
கற்றதெல்லாம் கரும்பலகையிலேதான்

-முகுந்தன் மகேந்திரன்



# வினாவிடைப் போட்டி முடிவு

1. 1896ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடை பெற்றது?
ஏக்கம், தென்கிழக்கு, அன்னம், கஸ்தூரி (ஏதென்ஸ்)

2. பறவையினமாக இருந்தும் பறக்க முடியாத பெரிய பறவை எது?
தீங்கு, பக்கம், முன்கோபம், பழிச்சொல் (தீக்கோழி)

3. ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இல்லத்தின் பெயர் என்ன?
அன்னம், இலங்கை, பரிதாபம், சன்மானம், தளிர், பகை (அலரிமாளிகை)

4. நம் தமிழ் மொழியைப் போல பழமையான மொழி மட்டுமல்ல, வளர்ச்சி பெற்ற மூன்று நாடுகளில் பேசப்படும் மொழி இது?
ஜேம்ஸ்நதி, ஊர்தி, மாமரம், அன்பு, மொட்டு, அழி (ஜேர்மன்மொழி)

5.நாடு கடத்தப்பட்டு உயிரிழந்த பெர்டினாண்ட் மார்கோஸ் எந்த நாட்டின் ஜனாதிபதியாவார்?
பிரிவினை, மலிவு, நெருப்பு, பணப்பை, யன்னல், ஸ்பெயின் (பிலிப்பைன்ஸ்)

*தவறுதலாக இங்கு பெட்டி எனும் சொல் இடம் பெற்றிருந்தது.


எழுதியவர்கள்:

| | |
|---|---|
| முகுந்தன் மகேந்திரன் | Berg.Gladbach |
| * மைதிலி மாசிலா | Saarbrücken (பரிசு) |
| மஞ்சுளா சிவசம்பு | Lohmar |
| பெனி அருள் | St,Wendel |
| றெனி அருள் | St,Wendel |
| ஜொனி அருள் | St,Wendel |
| தர்ஷிகா செல்வராஜா | Solingen |
| கோகுலசக்தி செல்வராஜா | Solingen |
| மோகன் இரத்தினசபாபதி | Escelbronn |
| ஜெயதீபா இரத்தினசபாபதி | Escelbronn |
| உமையாள் விக்னேஸ்வரன் | Hiddenhausen |
| கிருஸ்ணயோதி விக்னேஸ்வரன் | Hiddenhausen |
| சிவாஸ்கர் சிவராஜா | Duisburg |
| சிவதர்சினி சிவராஜா | Duisburg |
| அஜந்தன் அருளானந்தசிவம் | Remscheid |
| அகன்யா அருளானந்தசிவம் | Remscheid |

சிலருடைய பெயர்கள் இந்த முறை எங்களிடமிருந்து தவறி விட்டன. அதற்காக நாங்கள் உங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றோம்.

> என் சிறந்த தகுதி என் தகுதிக்குறைவை அறிந்திருப்பதுதான்.
>
> — அகஸ்டின் —

## மீசைக்காரப் பூனை



நல்ல நல்ல பூனை
நான் வளர்க்கும் பூனை

சின்னச் சின்னப் பூனை
செல்லமான பூனை

சொன்னபடி செய்யும்
துள்ளித் துள்ளி ஓடும்

சோறும் பாலும் உண்ணும்
சுத்தமாக இருக்கும்

'மியா மியா' என்னும்
மீசைக்காரப் பூனை

எழுதி அனுப்பியவர்: ஜெயகாந்

# அதிசய மோதிரம்



ரமாவுக்கத் தனது மோதிரம் மந்திரசக்தி வாய்ந்தது எனத் தெரிந்ததும். இன்பமாக இருந்தது. தனது பெற்றோரிடம் இது பற்றிக் கூறினால் நம்ப மாட்டார்கள் என்பதும் தெரிந்தது. ஆகவே மோதிரத்தைப் பற்றி இப்போது கூற வேண்டாம் என நினைத்தாள். சில நாட்கள் சென்றதும் கோடை விடுமுறை தொடங்கியது.

கோடை விடுமுறை என்றதும் ரமாவுக்கு எரிச்சல்தான் வந்தது. பள்ளிநாட்கள் என்றாலும் பள்ளிக்குச் செல்வதினால் பொழுது போகும். விடுமுறையில். அவளொத்த வயதினர் யாரும் ரமாவுடன் பேசவோ விளையாடவோ மாட்டார்களே. அப்பா மதிவண்ணனோ பெரிய தொழிலதிபர் எப்போதும் வேலை. அம்மாவோ பெண் மருத்துவர். அவருக்கும் வேலைதான். நிலாதான் சற்று ஆறுதலாக ரமாவுக்கு இருந்தாள்.

ஒரு நாள் இரவு சில திருடர்கள் ரமாவின் வீட்டிற்குள் புகுந்து விட்டார்கள். நிலா விழித்துக்

கொண்டாள். திருடர்களுக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றியது. அதன்படியே ஒரு கடிதத்தில் 'உங்களது மகள் எங்களிடத்தில் இருக்கிறாள். இன்னும் ஒரு கிழமைக்குப் பிறகு நீங்கள் பத்து லட்சம் ரூபாய் தெற்குப் பக்கத்தில் இருக்கும பாழடைந்த மாளிகையில் தரவேண்டும். அங்கு எமது கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அதைப் பெற்றுக் கொண்டு உங்களது மகளை உங்களுக்குத் தருவார். இதை நீங்கள் செய்யாவிட்டால், நாங்கள் உங்களது மகளைக் கொன்று விடுவோம்.- ..கறுப்புப் பூனைகள்..' என்று எழுதி விட்டு நிலாவைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

சத்தம் கேட்டு எல்லோரும் எழுந்து விட்டார்கள். நிலாவைத் தேடினார்கள். கடிதத்தைத்தான் கண்டார்கள். 'கறுப்புப் பூனைகள்' மிகவும் கொடூரமான போலீஸாரால் தேடப் பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம். ஆகவே கடிதத்தைக் கண்டவுடன் அப்பா போலீஸிடம் புகாரிடச் சென்று விட்டார். அம்மா அழத்துடங்கி விட்டாள். அவரின் கூச்சல் கேட்டு பக்கத்து வீட்டுப் பெண்கள் எல்லோருமே கூடி விட்டார்கள்.

அப்போது ரமாவுக்குத் திடீரெனத் தைரியம் ஏற்பட்டது. தானே தனது மோதிரத்தின் உதவியோடு நிலாவைத் தேட எண்ணினாள். தனது அறைக்குள் சென்று பெற்றோருக்குக் கடிதமொன்று எழுதி விட்டு இரகசியமாகப் புறப்பட்டாள். திருடர்களின் கடித்தத்தில் தெற்குப் பக்கத்தில் உள்ள பாழடைந்த மாளிகையில் என்றல்லவா எழுதியிருந்தது. ஆகவே திருடர்களும் அதற்குப் பக்கத்ததில்தான் இருக்க வேண்டும் என நினைத்தாள். அது மிகவும் தூரத்தில் இருந்தது அதுமட்டுமில்லாமல் இரவு வேளை வேறு. என்றாலும் அவள் பாழடைந்த மாளிகையை நோக்கி நடக்கத் துடங்கினாள்.

(தொடரும்)

தெய்வம் இருக்கிறதா? இல்லையா? அவன் நல்லவனா? கெட்டவனா? என்பதையெல்லாம் அறிய நேரத்தைச் செலவு செய்யாதீர்கள். நீங்கள் நல்லவரா? பிறருக்கு இயன்றவரை நல்லது செய்பவரா? ஒழுக்கத்திலும் நேர்மையிலும் பற்றுள்ளவரா? என்பதையெல்லாம் உங்கள் செயல் மூலம் அறியுங்கள். உங்களை அறிந்து திருத்திக் கொள்ளுங்கள்.

–புனிதர் பவுல்–

## சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | | |
|---|---|---|---|
| **இ–வ** | **வ–இ** | ஒலி | மாடம் |
| மதி | மமதை | மாது | புண் |
| மதிப்பெண் | கண் | கப்பல் | தாஜ்மகால் |
| பெண் | தப்பு | பல் | மகால் |
| கவி | புத்திரி | விதவை | கால் |
| கவிதை | திரி | வைரம் | பாசி |
| விதை | எவை | கலி | ரவை |
| தண்ணீர் | பதி | எழு | சத்து |
| | அகம் | எழுத்து | எண் |
| சந்தி | கம் | வானவில் | வன்னி |
| வாழை | தாம் | வில் | நாடி |
| வணக்கம் | கட | வில்லன் | பிழை |
| கம் | வரை | மரை | |
| விடி | சவி | பிடி | |
| தரம் | | தனி | |
| மசி | **மே–கீ** | | |
| விமானம் | மன்னவன் | **கீ–மே** | |
| மானம் | காக்கை | பாகை | |
| சன்னி | திரி | பாகைக்கா | |
| ஒட்டகம் | மண | ரன் | |
| பாரை | மணம் | தவி | |
| சதா | தரை | விரதம் | |
| தாலி | கரடி | தம் | |
| கீரை | மாதம் | மாடி | |
| | அம்பி | சதி | |

எல்லாப் பக்கத்தாலும் வரும் சொற்கள்: தை, வை, வா, கா, மா, நா, பா, தா, கை,

எழுதியவர்கள்:

| | |
|---|---|
| *கௌரியன் சிவானந்தராஜா | Elsdorf (பரிசு) |
| முகுந்தன் மகேந்திரன் | Berg.Gladbach |
| மைதிலி மாசிலா | Saarbrücken |
| மஞ்சுளா சிவசம்பூ | Lohmar |
| பெனி அருள் | St,Wendel |
| றெனி அருள் | St,Wendel |
| ஜொனி அருள் | St,Wendel |
| தர்ஷிகா செல்வராஜா | Solingen |
| கோகுலசக்தி செல்வராஜா | Solingen |
| மோகன் இரத்தினசபாபதி | Escelbronn |
| ஜெயதீபா இரத்தினசபாபதி | Escelbronn |
| உமையாள் விக்னேஸ்வரன் | Hiddenhausen |
| கிருஸ்ணயோதி விக்னேஸ்வரன் | Hiddenhausen |
| சிவாஸ்கர் சிவராஜா | Duisburg |
| சிவதர்சினி சிவராஜா | Duisburg |
| அஜந்தன் அருளானந்தசிவம் | Remscheid |

சிலருடைய பெயர்கள் இந்த முறை எங்களிடமிருந்து தவறி விட்டன. அதற்காக நாங்கள் உங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆந்தைகளுக்குப் பொதுவாகப் பகலில் கண் தெரியாது. அதனால் அவை இரவிலேயே இரை தேடுகின்றன. ஆனால் துருவப்பகுதியிலே வாழும் Schnee Eule ஆந்தைகள் பகலிலேயே உணவு தேடுகின்றன.

# வினாவிடைப் போட்டி

1. "ஐரோப்பாவின் ஆசியா" என்றழைக்கப்படும் பின் தங்கிய நாடு எது?
போட்டி, வாத்து, கழுத்து, பாக்கு, மரகதம், கப்பல்.

2. இலங்கையின் அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்த தமிழ் மன்னன் யார்?
எட்டு, மல்லன், வெண்ணிலா, அளவு, அன்பு

3. சிறந்த ஓவியர், அதே வேளையில் சிறந்த பொறியியலாளர் என்ற பெருமைக்குரியவர் இவர்?
பல்லி, யானை, பின்னால், ஈர்ப்பு, பட்டோலை, தூண்டாமணி, விக்கல், யன்னல், சினம்

4. ஆசியாவில் நிலக்கரி கூடுதலாக விளையும் நாடு?
இயற்கை, ஆந்தை, பாத்தி, வியாபாரம்

5. உலகத்திலேயே மிக உயரத்தில் உள்ள நாடு?
தீயார், பெற்றோர், பத்தினி

முடிவுத்திகதி 20.7.95

# ஈழமதை நாடிடுவோம்

ஆழமாய் யோசித்து
அறிவாக முடிவெடு
வேளை வருகிறது
ஈழமதை நாடிடுவாய்
மோதும் கடல் அலையில்
மிதந்து வரும் ஓடமதாய்
சூழும் இடர் நடுவே
சுகம் காணும் மாந்தர்களே
ஆழமாய் யோசித்து
அறிவாக முடிவெடு
நாளும் கிழமையும் தான்—உன்
வாழ்நாளில் கழிவதுண்டு
நாடு விட்டு நாடு வந்தாய்
நாக்கூசாமல் அகதி என்றாய்
கற்றுக் கொண்ட தொழிலோ
கடுகளவும் பயனில்லை என்பதால்
"சிற்றி" விட்டுச் "சிற்றி" பாய்ந்தாய்
சூழும் இடர் மட்டும்—உன்னைச்
சுற்றி வரும்
ஆழமாய் யோசித்து
அறிவோடு முடிவெடு
வேளை வருகிறது
ஈழமதை நாடிடுவோம்



—கிரிசாந் மனோறஞ்சிதராஜா—

## நம்ப முடியாச் செய்திகள்

Rußseeschwaiben எனும் பறவை ஐந்து வருடங்கள், தன் பறப்பதை இடை நிறுத்தாமல் தொடர்ந்து பறக்கக் கூடியது. இப் பறவை ஒரு நிமிடத்துக்கு *150* தரம் தனது செட்டையை அடிக்கின்றது. தான் போய்ச் சேர வேண்டிய இடத்தில் தரையிறங்கும் வரை வேறு இடங்களில் தரை இறங்காது. அது பறந்து கொண்டிருக்கும் போது வானத்திலேயே இரையைப் பெறுவதுடன் பறந்து கொண்டே நித்திரை செய்யும் பறவையாகும்.


பாம்புகளுக்கு கால்கள் உ ள, நம்பமுடியுமா? எல்லாப் பாம்புகளுக்கும் கால்கள் இல்லை. ஆனால் ஒரு வகை Boss எனும் பாம்புகளும், Pythons (மலைப்பாம்பு) எனும் பாம்புகளும் கால்களைக் கொண்டிருக்கின்றன. இப் பாம்புகளுக்கு கால்கள், சிறிய முள் போல அடிவயிற்றில் இரண்டு உ ள. இக் கால்கள் நிலத்தைத் தோண்டுவதற்கு பயன் படுகின்றன. நாம் சாதாரணமாகப் பார்க்கும் போது பாம்பின் கால்களைப் காணமுடியாது. இதனால் தான் தமிழில், "பாம்பின் கால் பாம்பறியும்" எனும் பழமொழி தோன்றியதோ!

பூமியில் கிட்டத்தட்ட 2700 பாம்பு வகைகள் இருக்கின்றன. இவற்றில் 400 வகைகள் நஞ்சுப் பாம்புகள். இவற்றில் 50 வகைகள் உயிர்களுக்கு மரணம் விளைவிக்கக் கூடியன. நாக பாம்பில் பல வகை உள. அவற்றில் இராச நாகபாம்பு அதிகளவு விசத்தை உடையது. Schwarze Mambas(D) எனும் பாம்பு ஒரே நேரத்தில் 10 மனிதர்களைக் கொல்லக் கூடிய விசத்தை வைத்திருக்கிறது. விரியன் எனும் பாம்பின் ஒரு துளி விசம் ஒரு மனிதன் இறப்பதற்குப் போதுமானது. மற்ற பாம்புகளை விட இப் பாம்புக்குக் கிட்ட மனிதர்கள் பாதுகாப்பின்றிச் செல்லக் கூடாது. இப் பாம்பு கடித்தால் இறப்பு விளைவது திண்ணம்.

வடஅமெரிக்காவில் உள்ள Texas-Klapper(D) எனும் பாம்பு எதிர்த்து சண்டையிடும் தன்மை கொண்டது. ஒரு தடைவையில் 45 மனிதர்களைக் கொல்லும் நஞ்சை வெளியேற்றும்.

Wolfspinne (D) எனும் ஒரு வகைச் சிலந்தி அசாதாரணமானது. தன் குஞ்சுகளை முற் பாதுகாப்புக் காரணமாக நாட்கணக்கில் தன் முதுகில் சுமந்து திரிகின்றது. இது கிட்டத்தட்ட நூறு குஞ்சுகளை தன் முதகில் சுமக்கின்றது.

கபிலன் பரமசிவம் Düsseldorf



ஈழம்
எங்கள்
நாடென்போம்
இதற்கு
ஏது
ஈடென்போம்

—சின்ன இராஜேஸ்வரன்—

புதிய முகவரி

**SIRUVAR AMUTHAM**
**ALEF STR 11**
**50189 ELSDORF**
**GERMANY**
**TEL. :02271/66527**
**KONTO NR. : 1146023746**
**BLZ 37050299**